மலேசியத் தமிழ் ஆய்விதழ்
Malaysian Journal of Tamil
eISSN: 2990-9694

# விண்ணமுதம் கவிதைத் தொகுப்பில் இயற்கைச் சார்ந்த பதிவுகள்

## Nature based impressions in 'Vinnamudham' poetry collection.

லோகப்பிரியா நடராஜன்/ Logapriya Nadarajan[1]
[1]Undergraduate Student, Sultan Idris Education University
Corresponding Email: priyahsanthi@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

விண்ணமுதம் கவிதைத் தொகுப்பில் காணப்படும் இயற்கைச் சார்ந்த பதிவுகளை ஆராய்வதே இந்த ஆய்வின் முதன்மை நோக்கமாகும். விண்ணமுதம் எனும் மரபுகவிதைத் தொகுப்பில் மொத்தம் 101 தமிழ்க் கவிதைகள் இடம்பெற்றுள்ளன. அதில் இயற்கை குறித்துச் சுமார் ஒன்பது கவிதைகள் இடம்பெற்றுள்ளன. இந்த ஆய்வு பண்புசார் அணுகுமுறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. அதோடு, இந்த ஆய்வில் நூலாய்வு எனும் அணுகுமுறையும் கையாளப்பட்டுள்ளது. இந்த ஆய்விற்கு விண்ணமுதம் எனும் தமிழ்க் கவிதைத் தொகுப்பே முதல் நிலை தரவாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. கவிதைகளில் இயற்கை எனும் கருப்பொருள் கவிஞரால் பல இடங்களில் வெளிக்காட்டப்பட்டுள்ளது. ஒவ்வொரு இடத்திலும் இயற்கைக்குரிய சிறப்பை அறிய முடிகிறது. அவ்வகையில் இவ்வாய்வின் வழி, இளைய தலைமுறையினர் மரபுகவிதைகளில் வருணிக்கப்பட்டிருக்கும் இயற்கைக்கும் தற்காலத்தில் மனிதர்கள் காத்து வரும் இயற்கைக்கும் உள்ள தொடர்பினையும் வேறுபாட்டையும் அறிந்து கொள்ள ஒரு தளமாக அமைந்துள்ளது. இந்த ஆய்வு விண்ணமுதம் எனும் தமிழ்க் கவிதைத் தொகுப்பில் இடம்பெற்றிருக்கும் இயற்கை குறித்து ஆய்வு செய்யப்படும் முதல் கட்டுரை என்று ஆய்வாளர் உறுதி செய்கின்றார்.

**கருச்சொற்கள்:** விண்ணமுதம் கவிதைத் தொகுப்பு, இயற்கை, பதிவுகள்

**Abstract**

The primary objective of this study is to look at the nature found in the traditional poetry collection Vinnamudham. A total of 101 Tamil poems are included in this collection of traditional poems called Vinnamudham. It contains about nine poems on nature. Through these poems it can be known that the poet has expressed his view of nature. This study is designed in qualitative approach. In addition, the literature review approach has also been used in this study. For this study, the Tamil poetry collection Vinnamudham has been used as primary data. In these poems the theme of nature has been brought out by the poet at many places. The natural beauty of each place can be known through this study. Thus, the way of this study is a platform for the younger generation to know the connection and difference between the nature described in the traditional poems and the nature preserved by humans nowadays. The researcher asserts that this study is the first essay to examine nature in the Tamil poetry collection Vinnamudam.

**Keywords:** Vinnamudham, Nature, Poem

**முன்னுரை**

விண்ணமுதம் கவிதைத் தொகுப்பில் இயற்கை சார்ந்த கவிதைகள் மொத்தம் ஒன்பது உள்ளன. ஒவ்வொரு கவிதையும் இயற்கைக்குரிய சிறப்பை நமக்கு எடுத்துரைக்கிறது. அகிலம், இயற்கைத் தாய், விலங்கினம், தென்றல், வெண்மேகம் என்று பல இயற்கை வடிவங்கள் இந்த ஆய்வுக் கட்டுரையில் சான்றாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. அவ்வகையில், ஒவ்வொரு இயற்கை வடிவமும் அதன் சிறப்பை எவ்வாறு வெளிகாட்டியுள்ளது என்பதை ஆராய்ந்து பார்ப்போம்.

**தரவுப் பகுப்பாய்வு**

**அகிலமெனும் பூஞ்சோலை**

விண்ணமுதம் கவிதைத் தொகுப்பில் கவிஞர் பல இடங்களில் இயற்கைக் குறித்த பதிவுகளை வருணித்துள்ளார். அதில் அகிலத்தைப் பற்றி அவர் கூறிய வார்த்தைகள் அனைத்தும் கேட்பதற்கும் வாசிப்பதற்கும் அவ்வளவு சுகத்தை அள்ளிக் கொடுக்கின்றது. கவிஞர் அகிலத்தை அவ்வளவு அழகாகச் சித்தரித்தரித்துள்ளார்.

அகிலமெனும் பூஞ்சோலை

அன்பளிக்கும் மலர்ச்சோலை!

கவிஞர் இவ்வரிகளில் அகிலத்தை ஒரு பூஞ்சோலையாக வருணித்து எழுதியிருப்பது வாசகர்களின் மனத்தை வெகுவாகக் கவர்ந்திருக்கின்றது. அதே வேளை, இந்த அகிலத்தில் அன்பு நிறைந்திருக்கின்றது என்பதையும் இக்கவிதை வரிகள் நமக்கு எடுத்துரைக்கின்றன. மேலும்,

உணவளிக்கும் பலவுயிரை

ஊணாகத் தாங்கிநின்றாய்!

என்ற கவிதை வரிகள் நமக்கு மிக ஆழமான கருத்தைக் கூறுகின்றன. அஃதாவது, இந்த அகிலம் நமக்கு உணவளிக்கும் பலவுயிர்களைத் தாங்கி கொண்டிருக்கின்றது. அதோடு, கவிஞர் இவ்விடத்தில் அகிலத்தை மீண்டும் ஒரு பூஞ்சோலையுடன் ஒப்பிட்டுக் கூறியுள்ளார். அதைத்தான் கவிஞர்

மணக்குமந்த நறுமலர்கள்

மணம்வீச மகிழ்ந்திருந்தாய்!

என்ற வரிகளில் மீண்டும் வருணித்துள்ளார்.

தொடர்ந்து, கவிஞர் இக்கவிதை வரிகளில் மாந்தர்கள் செய்யும் தவற்றை மிக அழகாகச் சுட்டிக் காட்டியிருப்பார். நாம் செய்த தவற்றுக்கு இயற்கையைப் பழி சொல்கிறோம் என்று நேர்த்தியாக மிக ஆழமான கருத்தைத் தெரிவித்துள்ளார். எ.கா

கரிவளியைக் கூட்டிவிட்டுக்

கதிரவனைப் பழிசொன்னோம்!

மரங்களினை அழித்துவிட்டு

வான்மழைக்குக் காத்துநின்றோம்!

அகிலத்தின் வெப்பத்தை அதிகரிக்கச் செய்தது மனிதர்களாகிய நம்முடைய செயல். ஆனால், அதை ஏற்றுக் கொள்ளாமல் கதிரவனின் வீச்சைக் குறை சொல்கிறோம். அதுமட்டுமல்லாமல், நம்மைச் சுற்றியிருக்கும் மரங்களை அழித்து விட்டு, பின் வானம் மழை பொழியவில்லை என்று குறை கூறுகிறோம். நமது இந்தச் செயலைத் தான் கவிஞர் இக்கவிதை வரிகளில் எடுத்துரைத்துள்ளார். இதைதான் திருவள்ளுவரும் தமது குறளில் விளக்கியுள்ளார்.

நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்

வான்இன் றமையா தொழுக்கு. (குறள் 20)

இக்குறள் மழையின் முக்கியத்துவத்தை அவ்வளவு அழகாக நமக்கு எடுத்துரைக்கிறது. நீரில்லாமல் உலக வாழ்வு அமையாது. அதுப்போல், நீரைத் தரும் வான்மழை இல்லாது போனால், எல்லோரிடமும் ஒழுக்கம் அமையாது. எனவே, மழை வளம் பெருக, மரங்களை வளர்க்க முயற்சி செய்ய வேண்டும் என்று திருவள்ளுவர் தமது கருத்தை இக்குறளின் வழி கூறியுள்ளார். ஆகவே, நம்மைச் சுற்றியிருக்கும் மரங்களை அழிப்பதை நிறுத்திவிட்டு, அவற்றை வளர்ப்பதற்கு முயற்சி செய்வோம். ஆக, விண்ணமுதம் கவிதைத் தொகுப்பில் அகிலத்தைப் பற்றி பல இடங்களில் கவிஞர் சித்தரித்துள்ளார். அகிலம் என்பது இயற்கையின் மறு வடிவம் என்பது அக்கவிதை வரிகளின் சான்று.

**விண்ணமுதத்தில் இயற்கைத் தாய்**

விண்ணமுதம் கவிதைத் தொகுப்பில் இயற்கைத் தாய் பற்றி கவிஞர் மிக அழகாகக் குறிப்பிட்டுள்ளார். பல பூக்களை நமக்குக் கொடுத்து, நம் வாழ்வில் மணத்தைச் சேர்த்தவளாக இயற்கைத் தாய் இக்கவிதைத் தொகுப்பில் சித்தரிக்கப்பட்டுள்ளாள். அதோடு, இயற்கைத் தாய் நமக்குத் தரும் கனிகளை நம்பி பல உயிரினங்கள் உயிர் வாழ்கின்றன. அஃதாவது, அந்தக் கனிகளினால் பல உயிர்களுக்கு உயிர் கொடுத்துள்ளாள் இயற்கைத் தாய் என்று இக்கவிதை வரிகளைக் கொண்டு கவிஞர் மிக அழகாகக் கூறியுள்ளார். எ.கா :

பூக்கள்தான் ஈன்றெடுத்தாய்

வாக்கில்நல் மணம்கொடுத்தாய்!

இவ்வரிகள் நமக்கு இயற்கைத் தாயின் படைப்புகளை மிக அழகாக எடுத்துரைக்கின்றன. மேலும்,

விலங்கினங்கள் வாழ்வதற்கு

மலைகளொடு காடுதந்தாய்!

எனும் வரிகளும் இயற்கைத் தாயின் மற்றொரு படைப்பின் அழகை நமக்கு எடுத்துரைக்கின்றன. இந்த அகிலத்தில் விலங்குங்கள் வாழ்வதற்காகவே இயற்கைத் தாய் மலைகளொடு சேர்த்துக் காட்டையும் நமக்குப் படைத்துள்ளாள். இப்படி விண்ணமுதம் கவிதைத் தொகுப்பில் இயற்கையைப் பற்றி ஒவ்வொரு வரிகளும் ஆழமான கருத்தை எடுத்துரைக்கின்றன. தொடர்ந்து, இயற்கைத் தாயின் சிறப்பை வருணிக்க மேலும் சில வரிகளை விண்ணமுதம் கவிதைத் தொகுப்பிலிருந்து எடுத்துக்காட்டாகச் சொல்ல விருப்பம் கொள்கிறேன்.

இயற்கைத்தாய் எனவொருத்தி

வியக்கின்ற வகையினிலே

செயலாற்றும் நோக்கினிலே

இயற்கைக்கோர் அணியமைத்தாள்!

இவ்வரிகள் இயற்கைத் தாய் என்பவள் நாம் அனைவரும் வியக்கும் வகையில் நம் அனைவருக்கும் பயன் தரும் எண்ணத்தில் இயற்கைக்கென ஒரு நெறி அமைத்தவள் எனப் பொருள்படுகிறது. விண்ணமுதம் கவிதைத் தொகுப்பில் இப்படிப் பல இடங்களில் இயற்கையின் அழகையும் அருமையும் சித்தரிக்கப்பட்டுள்ளது.

**வாயில்லா உயிர்களுக்குத் தாயாகிடுவோம்!**

விண்ணமுதம் கவிதைத் தொகுப்பில் தாயாக மாறிடுவோம் எனும் தலைப்பில் கவிஞர் எழுதியிருக்கும் கவிதை வாசிப்பவரின் மனத்தில் அப்படி ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

நன்றியொடு என்றென்றும்

நன்மைதரும் விலங்கினங்கள்;

மேற்காணும் கவிதை வரிகள் உயிரினங்களின் பண்பை நமக்கு எளிய முறையில் விளக்குகின்றது. விலங்கினங்கள் எப்பொழுதும் மனிதர்களுக்கு நன்றி உள்ள ஒரு தோழனாகவே அமையும் என்பதை இவ்வரிகளின் வழி நம்மால் உணர முடிகின்றது.

இதனையடுத்து, இப்படி ஒரு பண்பைக் கொண்ட விலங்குகளை மனிதர்கள் துன்புறுத்தக்கூடாது என்று கவிஞர் மிக அழகாக அறிவுறுத்தியுள்ளார். எ.கா :

வாயில்லா உயிர்களதை

வாட்டுவதைக் கைவிட்டால்;

நோயில்லாச் சிந்தனையை

நொடிப்பொழுதில் பெற்றிடுவோம்!

இவ்வரிகளில் நோயில்லாச் சிந்தனை என்ற சொற்களில் பல கருத்துகள் அடங்கியுள்ளன. விலங்குகளைத் துன்புறுத்துவதை நாம் நிறுத்தினால், அக்கணமே நாம் தெளிவான, அறிவான சிந்தனையை அடைவோம். அதோடு, 'தீட்டின மரத்திலே கூர் பார்ப்பதா?' எனும் பழமொழிக்கேற்ப நன்றியுடன் நம்மைப் பாதுகாத்த உயிரினங்களுக்கு நாமே தீங்கு நினைப்பது தவறு. அப்படி ஒரு சிந்தனை நமக்கு என்றுமே தோன்றக் கூடாது. இக்கருத்தையே விண்ணமுதம் கவிதைத் தொகுப்பில் இவ்வரிகளின் வழி கவிஞர் உணர்த்தியுள்ளார். இப்படிக் கவிதை முழுக்க விலங்கினத்தின் சிறப்பையும் அதைக் காப்பதின் அவசியத்தையும் கவிஞர் கூறிக் கொண்டே இருப்பார்.

மனிதனுக்கு நற்றோழன்

மாண்புடைய விலங்கினமாம்;

தனக்கெனவே சிந்திகாத்

தன்மையொத்த உயிரினமே!

இந்த வரிகள் விலங்கினங்கள் மனிதர்கள் மீது வைத்திருக்கும் நன்றியையும் அன்பையும் மிக அழகாகச் சித்தரிக்கின்றன. விலங்கினங்கள் பொதுவாகத், தனக்கென என்று யோசிக்காமல் நமக்காக யோசித்து, நம்மைக் காத்திட முயற்சி செய்யும் உயிரினம். அதனால்தான் அவை மாண்புடையவையாகத் திகழ்கின்றன. இப்படி, விலங்கினத்தின் சிறப்பை எளிய சொற்களால் கவிஞர் நம்மிடம் சேர்த்துள்ளார்.

இவ்வாறு தன்னலம் கருதாத விலங்கினத்தைக் காப்பது மனிதர்களாகிய நம்முடைய கடமை. ஆதலால், இவ்வுலகில் வாழும் விலங்கினத்திற்குத் தாயாக மாறி அவற்றைக் குழந்தை போல் காத்து நிற்போம் என்று கவிதையில் கவிஞர் எடுத்துரைத்துள்ளார். எ.கா:

சேயாகப் பிறவுயிரைச்

சிறப்பாய்நாம் வளர்த்திடவே;

தாயாக மாறிடுவோம்

தரணியிலே மனிதரெல்லாம்!

இக்கவிதை வரிகள் ‘தன் உயிரைப்போல் மன்னுயிரையும் நினை’ எனும் பழமொழிக்கு மிகப் பொருத்தமாக அமைந்துள்ளன. நாம் நம்முடைய உயிரை எவ்வாறு போற்றிப் பாதுகாக்கின்றோமோ அவ்வாறே இவ்வுலகில் வாழும் பிற உயிர்களையும் போற்றிப் பாதுகாக்க வேண்டும். இதைதான் கவிஞரும் தமது கவிதை வரிகளில் குறிப்பிட்டுள்ளார்.

**தென்றல்**

தென்றலைப் பற்றி இப்படிச் சுவாரசியமாக எங்கும் படித்ததில்லை. தென்றலை இப்படியும் வருணிக்க இயலுமா என்று விண்ணமுதம் கவிதைத் தொகுப்பை வாசித்த பின்பே உணர இயன்றது.

'கண்ணில் தெரியாக் காரிகையாய்'

இவ்வரியில் அவ்வளவு ஆழமான பொருள் மறைந்துள்ளது. தென்றல் என்பது யாருக்கும் யாருடைய கண்களுக்கும் தெரியாத ஒரு காரிகை என்று கவிஞர் மிக அழகாகக் கூறியுள்ளார்.

சுண்ணம் உடம்பில் பட்டதுபோல்

சுகந்தம் உணரச் செய்தாளே!

நம் உடலில் சுண்ணம் பூசும்பொழுது, அது நமக்கு ஒரு மென்மையான உணர்வைக் கொடுக்கும். அதே நேரம், சுண்ணத்தை உடலில் பூசிய பிறகு நமக்கு அப்படி ஒரு சுகமான மணம் கிடைக்கும். அதேபோல் தான், தென்றலும். தென்றல் நம் மீது படும்பொழுது, எவ்வாறு இருக்கும் என்பதை இதைவிட அழகாக எந்தக் கவிதையிலும் வருணிக்க இயலாது. இப்படி விண்ணமுதம் கவிதைத் தொகுப்பில் தென்றலின் பண்புகள் அவ்வளவு அழகாக வருணிக்கப்பட்டுள்ளன.

**வெண்மேகம்**

வெண்மேகத்தையும் அதன் பண்பையும் கவிஞர் விண்ணமுதம் கவிதைத் தொகுப்பில் மிக அழகாக எழுதியுள்ளார்.

வெண்பட்டை உடுத்தியதோ

வெண்மேகம் இந்நாளில்?

நாம் அனைவருக்கும் வெண்மேகம் எப்படி இருக்கும் என்று நன்றாகத் தெரியும். ஏதோ ஒரு வென்பட்டையை ஆடையாக அணிந்தது போல் இருக்கும். அதைத்தான், கவிஞர் 'வெண்பட்டை உடுத்தியதோ' என்று அழகிய சொற்களில் குறிப்பிட்டுள்ளார்.

மானினைப்போல் ஓடுகின்றாய்!

மன்னவனைக் கண்டிடவோ?

வெண்மேகத்தைச் சற்று உய்த்து வானில் பார்த்தால், அஃது அசைந்து நகர்வதை நம்மால் உணர முடியும். ஆக, வெண்மேகத்தின் நகர்தலை தான் கவிஞர் இவ்வரிகளில் இவ்வாறு சித்தரித்துள்ளார். தன்னுடைய மன்னவனைக் காண ஒரு பேதை மான் போல ஓடுவதையும் வெண்மேகத்தின் அசைவையும் கவிஞர் ஒப்பிட்டு மிக அழகாக இவ்வரிகளில் எழுதியுள்ளார்.

**நிறைவுரை**

இப்படி விண்ணமுதம் கவிதைத் தொகுப்பில் இயற்கைச் சார்ந்த அகிலம், இயற்கைத் தாய், விலங்கினம், தென்றல், வெண்மேகம் போன்ற பல இயற்கை வடிவங்களையும் அவற்றின் பண்புகளையும் கவிஞர் மிக அழகாக வருணித்துள்ளார். நான் எடுத்துக்காட்டாகக் காட்டிய ஒவ்வோர் இடத்திலும் இயற்கைக்குரிய சிறப்பை நம்மால் தெளிவாகக் காண முடிகின்றது.

## துணைநூற்பட்டியல்

சரண் சுக்லாம் ஆத்மலிங்கம். (2021). விண்ணமுதம். பேரா. விண்ணமுதன் ஆத்மலிங்கம்.

இலக்கணம், செய்யுள், மொழியணிக்கான விளக்கவுரை. (2016). Bahagian Pembangunan Kurikulum. Kementerian Pendidikan Malaysia.

ஆசைத்தம்பி, மு. (2021). பூந்தழல். கோலாலம்பூர். உமா பதிப்பகம்.

புலியூர்க் கேசிகன். (2010). திருக்குறள். சென்னை. பூம்புகார் பதிப்பகம்.